பிரஸாா் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

18 12 2025 6 30

வியாழக்கிழமை மாலை

## மாநிலச் செய்திகள்

### தலைப்புச் செய்திகள்

1. இந்தியா – ஓமன் இடையே தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் இன்று மஸ்கட்டில் கையெழுத்தானது.

2. ஜனநாயகத்தின் மாண்புகளை குலைக்கும் வகையில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் செயல்படுவதாக மத்திய அமைச்சர் திரு சிவராஜ் சிங் சௌகான் குற்றம்சாட்டியுள்ளார்.

3. சிறுபான்மையினருக்கு உறுதுணையாக திமுக அரசு இருக்கும் என்று மாநில அமைச்சர் திரு மதிவேந்தன் கூறியுள்ளார்.

4. உயர்கல்வித் துறையின் உயிர்நாடியை ஒடுக்கி, தமிழக இளைஞர்களின் கல்விக் கனவை சிதைப்பது தான் திமுக-வின் சமூக நீதியா என்று பிஜேபி வினவியுள்ளது.

5. உலக ரோல் பால் சாம்பியன் போட்டியில் இந்தியா ஆடவர் மற்றும் மகளிர் பிரிவில் கோப்பையை வென்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

இந்தியா – ஓமன் இடையே தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் இன்று கையெழுத்தானது.

மஸ்கட்டில் பிரதமர் திரு நரேந்திர மோடி மற்றும் ஓமன் சுல்தான் Haitham Bin Tariq Al Said முன்னிலையில் இந்த ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது.

இது வரலாற்றுச்  சிறப்புமிக்கது என்று மத்திய தொழில் மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை பதிவு செய்துள்ள அவர், கூடுதல் வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கும், சிறு-குறு தொழில்துறையை வலுப்படுத்துவதற்கும் இது உதவிடும் என்று குறிப்பிட்டுள்ளார்.

முக்கிய துறைகளின் ஏற்றுமதியை அதிகரிக்க இந்த ஒப்பந்தம் வகை செய்வதாக திரு பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே, ஜவுளி, வேளாண், ஆட்டோ மொபைல் உள்ளிட்ட பல்வேறு துறைகள் இந்த ஒப்பந்தத்தின் மூலம் பயனடையும் என்று தகவல் ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல் முருகன் கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனைத் தெரிவித்துள்ள அவர், கைவினைக் கலைஞர்களின் மேம்பாட்டுக்கும் மகளிர் தலைமையிலான தொழில் துறையின் வளர்ச்சிக்கும் இது உத்வேகம் அளிக்கும் என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில், பிரதமர் ஓமனில் அரசுமுறைப் பயணத்தை முடித்துக் கொண்டு சற்றுமுன் புதுதில்லி புறப்பட்டார்.

>><><><><<

ஜனநாயகத்தின் மாண்புகளை குலைக்கும் வகையில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் செயல்படுவதாக மத்திய அமைச்சர் திரு சிவராஜ் சிங் சௌகான் குற்றம்சாட்டியுள்ளார்.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான ஊரக வேலைவாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வாதார இயக்கம் குறித்த மசோதா மீதான விவாதத்தின் போது  மக்களவையில் எதிர்க்கட்சி உறுப்பினர்களின் செயல்பாடுகள் ஏற்புடையதாக இல்லை என்றார்.

இந்த மசோதா 125 நாட்கள் வேலை கிடைப்பதை உறுதி செய்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதற்காக ஒரு லட்சத்து 51 ஆயிரத்து 282 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு இருப்பதாகவும் அவர் கூறினார்.

இதில் மத்திய அரசின் பங்கு 95 ஆயிரம் கோடி ரூபாய்க்கும் கூடுதலாக இருக்கும் என்றும் திரு சிவராஜ் சிங் சௌகான் தெரிவித்தார்.

>><><><><<

சிறுபான்மையினருக்கு உறுதுணையாக திமுக அரசு இருக்கும் என்று மாநில அமைச்சர் திரு மதிவேந்தன் கூறியுள்ளார்.

இன்று நாமக்கல்லில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சிறுபான்மையினருக்கான நலத்திட்ட உதவிகளை வழங்கி அவர் பேசினார்.

சிறுபான்மையினர் நலனுக்காக செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களையும் அமைச்சர் பட்டியலிட்டார்.

இவற்றை சம்பந்தப்பட்டவர்கள் முழுமையாக பயன்படுத்தி கொள்ள வேண்டும் என்றும் திரு மதிவேந்தன் கேட்டுக் கொண்டார்.

>><><><><<

தமிழகத்தில் உள்ள முக்கிய பல்கலைக் கழகங்களில் 50 சதவீத்திற்கும் மேற்பட்ட பேராசிரியர் பணியிடங்கள் காலியாக உள்ளது திமுக அரசின் நிர்வாகத் தோல்வியை எடுத்துரைப்பதாக உள்ளது என்று பிஜேபி மாநில தலைவர் திரு நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் விடுத்துள்ள செய்தியில், தமிழக அரசின் கீழ் இயங்கும் 12 பல்கலைக் கழகங்களில் 40 சதவீத ஆசிரியர் பணியிடங்கள் காலியாக உள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இதேபோல் 9 பல்கலைக்கழகங்களில் 15 முதல் 40 சதவீத பணியிடங்கள் காலியாக உள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

கல்வித்துறைக்கு தேவையான கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தாமல் கல்வியில் சிறந்த தமிழ்நாடு என்று விளம்பர விழா எடுப்பதற்கு திமுக அரசு வெட்கப்பட வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

உயர்கல்வித் துறையின் உயிர்நாடியை ஒடுக்கி, தமிழக இளைஞர்களின் கல்விக் கனவை சிதைப்பது தான் திமுக-வின் சமூக நீதியா என்றும் திரு நயினார் நாகேந்திரன் வினவியுள்ளார்.

>><><><><<

தமிழகத்தில் உள்ள காவல்துறை உயரதிகாரிகளின் இல்லங்களில் ஆர்டர்லிகளாக ஒருவர் கூட பணியில் இல்லை என்று காவல்துறை தலைவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

இதுதொடர்பான வழக்கினை விசாரணை செய்த நீதிபதிகள் திரு எஸ் எம் சுப்பிரமணியம், திரு சி குமரப்பன் அமர்வு முன் ஆஜரான அரசு தலைமை குற்றவியல் வழக்கறிஞர் காவல்துறைத் தலைவரின் அறிக்கையை தாக்கல் செய்தார்.

இதனைத் தொடர்ந்து பணியில் இருப்பதாக கூறிவிட்டு தனிப்பட்ட வேலைகளில் ஈடுபடும் காவலர்களை கண்காணிக்க பின்பற்றப்படும் நடவடிக்கைகள் குறித்து நாளை தகவல் தெரிவிக்குமாறு உத்தரவிட்ட நீதிபதிகள் இவ்வழக்கினை ஒத்திவைத்தனர்.

>><><><><<

மத்திய அரசின் திட்டங்கள் காரணமாக தொழில் முனைவோர்களாக உருவாகியுள்ள மகளிருடன் இணைந்து சேலத்தில் மாணவர்கள் நடத்தும் இரண்டு நாள் வணிக கண்காட்சி இன்று தொடங்கியது.

இது பொதுமக்களின் கவனத்தை வெகுவாக ஈர்த்து வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் – விஜயகுமார் – 44 செகண்ட்ஸ்)

இதில் பங்கேற்றது மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது என்று தொழில் முனைவோர்கள் தெரிவித்தனர்.

(வாய்ஸ் பைட் – தொழில்முனைவோர் - 42 செகண்ட்ஸ்)

>><><><><<

நீலகிரி மாவட்டத்தில் போக்குவரத்து நெரிசலை தொழில்நுட்ப உதவியுடன் குறைப்பதற்கான பணிகள் இன்று தொடங்கின.

இறுதியாண்டு பிடெக் மாணவர்களுடன் இணைந்து காவல்துறையினர் இப்பணியினை மேற்கொண்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் – சரவணன் – 38 செகண்ட்ஸ்)

>><><><><<

மாவட்டச் செய்திகள்

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் தமிழ் ஆட்சிமொழி சட்டவாரம் குறித்த விழிப்புணர்வு பேரணியை ஆட்சியர் திரு பிரசாந்த் இன்று தொடங்கி வைத்தார்.

--------------

தூத்துக்குடி மாவட்டத்தில் பயிர்களை சேதப்படுத்தும் காட்டுப் பன்றிகளை கட்டுப்படுத்த வனத்துறையினர் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக ஆட்சியர் திரு இளம் பகவத் கூறியுள்ளார்.

--------------------

காஞ்சிபுரம் மாவட்டத்தில் சிறுபான்மையினருக்கான நலத்திட்ட உதவிகளை ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் இன்று வழங்கினார்.

--------------------

மதுரை மாவட்டத்தில் எதிர்கால இளைஞர்களுக்கான 3 நாள் பயிற்சி முகாமினை ஆட்சியர் திரு பிரவீன் குமார் இன்று தொடங்கி வைத்தார்.

--------------------

தஞ்சாவூர் மாவட்டம் குருங்குளத்தில் உள்ள சர்க்கரை ஆலையில் நடப்பாண்டுக்கான அரவைப் பணி இன்று தொடங்கியது.

--------------------

குற்றாலத்தில் சற்றுலாப் பயணிகள் குளிப்பதற்கு இன்று முதல் மீண்டும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

>><><><><<

விளையாட்டுச் செய்திகள்

உலக ரோல் பால் சாம்பியன் போட்டியில் இந்தியா ஆடவர் மற்றும் மகளிர் பிரிவில் கோப்பையை வென்றது.

துபாயில் நடைபெற்ற இப்போட்டியின் இறுதியாட்டத்தில் இந்தியா ஆடவர் மற்றும் மகளிர் பிரிவில் கென்யாவை வென்று கோப்பையை கைப்பற்றியது.

------------

ஜெர்மனியில் நடைபெற்று வரும் 19 வயதிற்குட்பட்டோருக்கான சர்வதேச பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Mithes Rameshwaran இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவில் Niyati Alok-ம் இரண்டாவது சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளார்.

-------------------

பங்களாதேஷ் சர்வதேச சேலஞ்ச் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Anuj Kale- Ishita Negi இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

>> <<